**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின்**

**இணைச்செயல்முறைகள், சென்னை – 6**

**ந.க.எண்.015715/W1/இ1/2021, நாள்.23.08.2022**

**பொருள்** : பள்ளிக்கல்வி - பள்ளி பதிவேடுகள் அனைத்தும் கணினி மயமாக்குதல் மற்றும் தேவையற்ற பணிப்பதிவேடுகள் நீக்குதல் – அரசாணை வெளியிடப்பட்டது – நடைமுறைப்படுத்துதல் - சார்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.154/பள்ளிக்கல்வித்(பக5(2)துறை), நாள்.15.11.2021.
2. சென்னை , தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 015715/W1/இ1/2021, நாள்.24.05.2022
3. சென்னை, தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2411/ஈ2/2020, நாள்.23.06.2022.

*****

தமிழ்நாடு அரசு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நலன் சார்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து சுமார் 72இலட்சம் மாணவ / மாணவிகள் பயின்று வருகின்றனர். ஆசிரியர்களின் பணிச்சூழல் இணக்கமான முறையில் இருப்பதை உறுதி செய்யவும், தேவையற்ற நிர்வாக பணிச்சுமையை குறைக்கவும், தங்களது பணிநேரத்தை மாணவர்களின் கற்றல் / கற்பித்தல் பணிக்காக முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளும்வகையில் 2021-2022ஆம் கல்வியாண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மான்ய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அவர்கள் பள்ளி பதிவேடுகளை கணினி மயமாக்கப்படும் மற்றும் தேவையற்ற பதிவேடுகள் நீக்கம் செய்யப்படும் என்று அறிவித்தார். அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் பார்வை(1)இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி, பின்வரும் 11 பதிவேடுகளை நீக்கம் செய்திடவும் , 81 பதிவேடுகளை கல்வி தகவல் மேலாண்மை முறைமை வாயிலாக கணினியில் (இணையவழியில்) மட்டும் பராமரித்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வழக்கொழிந்த பதிவேடுகள்

1. Treasury Register
2. Salary Deduction Register
3. Supplementary Cash Register
4. Permanent Balance Register
5. Pending Special Fees Register
6. Penalty/ Fine Register
7. Un-Disburse Payment (UDP) Register
8. Bill Register
9. Contingency Register
10. Retails Cost Register
11. Individual Aid Register

பார்வை(3)இல் காணும் செயல்முறையின்படி, எண்ணும் எழுத்தும் திட்டத்தை செயல்படுத்தும் 1, 2 மற்றும் 3ஆம் வகுப்பு ஆசிரியர்கள் பாடக்குறிப்பேடு (Notes of Lesson) மட்டும் பராமரித்தல் போதுமானது. இதைத்தவிர வேறு எந்தவொரு பதிவேட்டையும் பராமரிக்க தேவை இல்லை என தெளிவாக அறிவுறுத்தப்படுகிறது. இந்நிலையில் 4 முதல் 12ஆம் வகுப்பு பாடஆசிரியர்களும் பாடக்குறிப்பேடு (Notes of Lesson) மட்டும் பராமரித்தல் போதுமானது. பாடத்திட்டம் (Lesson Plan) , பணி செய்பதிவேடு (Work done Register) ஆகிய பதிவேடுகளை பராமரிக்க தேவையில்லை என அனைத்து தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வை(1)இல் காண் அரசாணை நகல்.

/ஒப்பம்/...

பள்ளிக்கல்வி ஆணையர் / தொடக்கக்கல்வி இயக்குநர்,

பள்ளிக்கல்வி ஆணையருக்காக/ தொடக்கக்கல்வி இயக்குநருக்காக

23-8-2022 23/8/22

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்,

நகல்: மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை.